மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்
Probate O.P No. 167-2024
Date 09.03.2026

Deposition of Witness P.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஸ்வநாதன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் சாட்சி ஆவேன். நீதிமன்ற சம்மன் மூலம் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். ராமநாதன்பிள்ளை உயில் சம்பந்தமாக நான் சாட்சி சொல்வதற்கு சம்மன் வந்தது. ராமநாதன்பிள்ளை எனது பக்கத்து வீட்டுக்காரர். உயில் சம்பந்தமாக என்னை அழைத்தார். அவர் சுய சம்பாதத்தில் சம்பாதித்த சொத்தை அவரது மகனாகிய ஜெயகோபாலுக்கும், பேரன் ஜெயவெங்கடேஷ்க்கும் உயில் எழுதுவதாக என்னை அழைத்தனர். ஆவணம் எழுத்தர் கணேசன் என்பவர் உயில் ஆவணத்தை வீட்டிற்கு வந்து எழுதினார். ராமநாதன்பிள்ளை சொல்ல சொல்ல ஆவண எழுத்தர் கணேசன் எழுதினார். நான் அப்போது உடன் இருந்தேன். அவர் அப்போது உடல் ஆரோக்கியமாகவும் இருந்தார். 27.02.2001 அன்று எழுதப்பட்டது. மேற்கண்ட தேதியிலேயே திருப்பூண்டி சார்பாதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 5/2001 என பதிவு செய்யப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணமானது திருப்பூண்டி சார்பாதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 5/2001 என்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். உயிலில் உள்ள சாராம்சங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். உயிலில் இரண்டு A மற்றும் B என்ற செடுயூலாக பிரிக்கப்பட்டது. அதில் A

schedule அவரது மகன் ஜெயகோபாலுக்கும், B schedule அவரது பேரன் ஜெயவெங்கடேஷ்க்கும் பிரிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் **ம.சா.ஆ.14** (1வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஆவணத்திற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையெழுத்து **ம.சா.ஆ.15**. என்னுடன் ராஜேந்திரபாபு சாட்சி கையொப்பம் செய்தார். ராமநாதன்பிள்ளை மகள் பாக்கியலட்சுமி என்பவரும் கையொப்பம் செய்தார். கனகராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். எந்தவித வற்புறுத்தலும் இல்லாமல் அவர் சொந்த முடிவில் எழுதப்பட்ட உயில் என்றால் சரிதான்.

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணை இல்லை.

**1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.